ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
අති විශෙෂ
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை
அதி விசேஷமானது

අංක 2374/17 - 2024 මාර්තු මස 05 වැනි අඟහරුවාදා - 2024.03.05
*2374/17 ஆம் இலக்கம் - 2024 ஆம் ஆண்டு மாச்சு மாதம் 05 ஆந் திகதி செவ்வாய்க்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

## பகுதி I : தொகுதி (I) - பொது

### அரசாங்க அறிவித்தல்கள்

*ச.வ.-பி. 5/2021*

**2021 ஆம் ஆண்டின் 21 ஆம் இலக்க, பெற்றோலிய வளங்கள் சட்டம்**

*2021 ஆம் ஆண்டின் 21 ஆம் இலக்க, பெற்றோலிய வளங்கள் சட்டத்தின் 4(அ) மற்றும் 16(4) என்னும் பிரிவுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் அச்சட்டத்தின் 48 ஆம் பிரிவின் கீழ் மின்சக்தி மற்றும் வலுசக்தி அமைச்சரினால் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதிகள்.*

**கஞ்சன விஜேசேகர,**
மின்சக்தி மற்றும் வலுசக்தி அமைச்சர்.

கொழும்பு,
*2024, மாச்சு 01.*

**ஒழுங்குவிதிகள்**

1. இவ்வொழுங்குவிதிகள், 2024 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க, பெற்றோலிய வளங்கள் (தேடிக் கண்டறிகை மற்றும் அபிவிருத்தித் துண்டு நிலப்படம்) ஒழுங்குவிதிகள் என எடுத்துக்காட்டப்படலாம்.

2. (1) அதிகாரசபையானது (இதனகத்துப் பின்னர் "நிலப்படம்" எனக் குறிப்பீடு செய்யப்படும்) தேடிக்கண்டறிகைத் துண்டங்களையும் அபிவிருத்தித் துண்டங்களையும் எல்லை வரையறுப்பதற்கும் பெயர்குறிப்பதற்குமென கரைகடந்த மற்றும் கரைமீதான இடப்பரப்புக்களை நுண்விலைசார் பிரிவுகளாகப் பிரிக்கின்ற நிலப்படமொன்றைத் தயாரித்தல் வேண்டும்; அது, பின்வரும் நடவடிக்கைமுறைக்கு இசைந்தொழுகி, கூட்டாய்வுகள், தேடிக்கண்டறிகை மற்றும் அபிவிருத்தி என்பவற்றுக்காகப் பெயர் குறிக்கப்படுதல் வேண்டும் :-

(அ) சந்தேகத்துக்கிடமான பெற்றோலிய வள இடப்பரப்புக்களை அடையாளம் காணுதல் ;

1A - PG 6679 — 354 (2024/03)
*இவ் அதிவிசேட வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

(ஆ) அடையாளங்காணப்பட்ட இடப்பரப்புக்கள் உள்ளடங்கலாக, நிலப்படத்தைத் தயாரிப்பதற்காக இயைபான அரசாங்க முகவராண்மைகளிடமிருந்து உறுதிப்படுத்தலைப் பெற்றுக் கொள்ளுதல்;

(இ) பந்தி (ஆ) இன் கீழான உறுதிப்படுத்தலின் மேல், நிலப்படத்தைத் தயாரிப்பதற்கு சபையின் அங்கீகாரத்தைப் பெற்றுக் கொள்ளுதல் ;

(ஈ) அமைச்சரின் அங்கீகாரத்துக்காக நிலப்படத்தின் வரைவைச் சமர்ப்பித்தல் ; அத்துடன்

(உ) நிலப்படத்தை அரசாங்க வர்த்தமானியிலும் மற்றும் அதிகாரசபையின் வலைத்தளத்திலும் வெளியிடுதல்.

(2) நிலப்படத்தைத் தயாரிப்பதில் - ;

(அ) கரைகடந்த நுண்விலைசார் பிரிவுகளை எல்லைவரையறுக்கும் நோக்கத்துக்காக, நாட்டின் எல்லைக்கோடு, கடலோர எல்லைகள் மற்றும் நில அளவையாளர் தலைமையதிபதியினால் அங்கீகரிக்கப்பட்ட வேறு எவையேனும் தொடர்புடைய நிலப்படக் குறிப்பீடுகள் என்பன பயன்படுத்தப்படுதல் வேண்டும் ;

(ஆ) கரைமீதான நுண்விலைசார் பிரிவுகள், அதிகார சபையுடனான கலந்தாலோசனையுன் நில அளவையாளர் தலைமையதிபதியினால் எல்லைவரையறை செய்யப்படுதல் வேண்டும்.

3. நிலப்படமானது பின்வருவனவற்றை உள்ளடக்குதல் வேண்டும் :-

(அ) தனித்துவமான துண்டக் குறிப்பீட்டு இலக்கம் ;

(ஆ) ஆயத்தொலை முறைமை :

(இ) திட்ட விபரம் ;

(ஈ) தரவு ;

(உ) அளவு ;

(ஊ) மூலம் ;

(எ) வெளியிடும் உருவகம் பற்றிய விவரங்கள் ; அத்துடன்

(ஏ) வேறு எவையேனும் இயைபான தகவல்கள்.

4. அமைச்சரின் அங்கீகாரத்தின் மேல் அதிகார சபையானது, வர்த்தமானியில் நிலப்படத்தை வெளியிடுதல் வேண்டும்.

5. (1) வர்த்தமானியில் வெளியிடப்பட்ட நிலப்படத்துக்கு ஏதேனும் சீராக்கம் அவசியமாகவுள்ளதென அதிகாரசபை அபிப்பிராயப்படுமிடத்து, அவ்வதிகார சபை நிலப்படத்தை சீரமைப்பதற்கென அமைச்சரிடமிருந்து விசேட அனுமதியொன்றைப் பெற்றுக் கொள்ளுதல் வேண்டும்.

(2) ஓராம் உப ஒழுங்குவிதியின் கீழ் பெற்றுக்கொள்ளப்பட்ட விசேட அனுமதியின் மேல், அதிகார சபையானது 2 ஆம் ஒழுங்குவிதியில் எடுத்துக் கூறப்பட்ட நடவடிக்கை முறையைப் பின்பற்றி நிலப்படத்தைச் சீரமைத்தல் வேண்டும்.

6. ஒழுங்குவிதி 4 இன் கீழ் நிலப்படம் வெளியிடப்பட்டமை எவ்வாறிருப்பினும், எல்லைவரையறுக்கப்பட்டதும் பெயர் குறிக்கப்பட்டதுமான நிலப்பட இடப்பரப்பினுள் அரசாங்கத்தினால் மேற்கொள்ளப்படும் வேறு எவையேனும் அபிவிருத்தி முன்முயற்சிகள் அல்லது செயற்பாடுகள் தடுக்கப்படுதலாகாது.

EOG 03 - 0036/1

*ச. வ. பி. 5/2021*

**2021 ஆம் ஆண்டின் 21 ஆம் இலக்க, பெற்றோலிய வளங்கள் சட்டம்**

*2021 ஆம் ஆண்டின் 21 ஆம் இலக்க, பெற்றோலிய வளங்கள் சட்டத்தின் 13(3) ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் மேற்கூறப்பட்ட சட்டத்தின் 48 ஆம் பிரிவின் கீழ் மின்சக்தி மற்றும் வலுசக்தி அமைச்சரினால் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதிகள்.*

**கஞ்சன விஜேசேகர,**
*மின்சக்தி மற்றும் வலுசக்தி அமைச்சர்.*

கொழும்பு,
*2024, மாச்சு 01.*

**ஒழுங்குவிதிகள்**

1. இவ்வொழுங்குவிதிகள், 2024 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க, பெற்றோலிய வளங்கள் (தரவுகளுக்கு உரிமமளித்தல்) ஒழுங்குவிதிகள் என எடுத்துக்காட்டப்படலாம்.

2. ஆளொருவர், (இதனகத்துப் பின்னர் "அதிகார சபை" எனக் குறிப்பீடு செய்யப்படும்) இலங்கைப் பெற்றோலிய அபிவிருத்தி அதிகார சபையினால் அதற்கென வழங்கப்பட்ட உரிமமொன்றின் அதிகாரத்தின் கீழன்றி, எவையேனும் பெற்றோலியத் தரவுகளை அணுகுதலாகாது.

3. வர்த்தக, கல்விசார் அல்லது விஞ்ஞானப் பாவனைக்கான எவையேனும் பெற்றோலியத் தரவுகளை அணுகுவதற்கு விரும்புகின்ற எவரேனுமாள், தரவுகளுக்கான அணுகுகை உரிமத்தைப் பெற்றுக்கொள்ளும் நோக்கத்துக்காக, பொருளளவில் இதற்கான அட்டவணையிற் தரப்பட்டுள்ள படிவத்தில் அதிகார சபையின் பணிப்பாளர் தலைமையதிபதிக்கு விண்ணப்பமொன்றைச் செய்தல் வேண்டும். பணிப்பாளர் தலைமையதிபதி, அவசியமானவிடத்து, தகவல்களைக் கொடுத்துதவும்படி விண்ணப்பகாரரொருவரைத் தேவைப்படுத்தலாம்.

4. விண்ணப்பமொன்றைப் பெற்றதன்மேல் பணிப்பாளர் தலைமையதிபதி, விண்ணப்பத்திலும் ஆவணங்களிலும் அடங்கியுள்ள கருமங்களைக் கவனத்துட்கொண்டதன் மீது (இவ்வொழுங்கு விதிகளில் "சபை" எனக் குறிப்பீடு செய்யப்படும்) அதிகார சபையின் பணிப்பாளர் சபைக்கு அறிக்கையொன்றைச் சமர்ப்பித்தல் வேண்டும்.

5. நான்காம் ஒழுங்குவிதியின் கீழான அறிக்கையைப் பெற்றதன்மேல், அதிகார சபையானது, விண்ணப்பத்திலும் ஆவணங்களிலும் உள்ள கருமங்களையும், அறிக்கையையும், விதப்புரை ஏதேனுமிருப்பின் அதனையும் கவனத்துட்கொண்டதன் மீது ஒன்றில் தரவுகளை அணுகுவதற்காக விண்ணப்பக்காரருக்குத் தரவுகளுக்கான அணுகுகை உரிமமொன்று வழங்கப்படுவதற்கு அவர் தகவுடையவராகவுள்ளாரென அவருக்கு அறிவித்தல் வேண்டும் அல்லது அதிகார சபையினால் பதியப்பட வேண்டிய காரணங்களுக்காகத் தரவுகளுக்கான அணுகுகை உரிமமொன்றை வழங்க மறுத்தல் வேண்டும். அதிகார சபையானது அதன் முடிபை விண்ணப்பகாரருக்கு எழுத்தில் அறிவித்தல் வேண்டுமென்பதுடன் தரவுகளுக்கான அணுகுகை உரிமமொன்றை அளிக்க மறுக்கின்ற விடயத்தில் அதற்கான காரணங்களை அது குறிப்பிடுதலும் வேண்டும்.

6. நான்காம் ஒழுங்குவிதியின் கீழ் உரிமமொன்று வழங்கப்படுவதற்குத் தகவுடைய ஒவ்வோராளும் பெற்றோலியத் தரவுகளை அணுகுவதற்காகவும் பயன்படுத்துவதற்காகவும் தரவுகளுக்கான அணுகுகை உரிமத்தை வழங்குமுன்னர் அதிகார சபையுடனான விண்ணப்பத்திற் குறிப்பிடப்பட்டவாறான தேவைப்பாட்டின் அடிப்படையின் மீது வெளிக்காட்டுகை சாரா உடன்படிக்கை, தரவுகளுக்கான உரிமமளித்தல் உடன்படிக்கை அல்லது தரவுகளைப் பகிர்தல் உடன்படிக்கை ஒன்றைச் செய்துகொள்ளுதல் வேண்டுமென்பதுடன் இயைபான உடன்படிக்கை கையொப்பமிடப்பட்டதன்மேல் அதிகார சபையானது தரவுகளுக்கான அணுகுகை உரிமமொன்றை வழங்குதலும் வேண்டும். தரவுகளுக்கான அணுகுகை உரிமக் கட்டணம் சம்பந்தப்பட்ட நிகழ்வுகளினதும் தரவுகளின் மாறுநிலையினதும் அடிப்படையின் மீது சபையினால் தீர்மானிக்கப்படுதல் வேண்டுமென்பதுடன் இயைபான உடன்படிக்கையினால் கருத்திற்கொள்ளப்படுதலும் வேண்டும்.

7. தரவுகளுக்கான அணுகுகை உரிமம் ஒவ்வொன்றும் முன்னரே இல்லாதொழிக்கப்பட்டாலொழிய, வெளிக்காட்டுகைசாரா உடன்படிக்கை, தரவுகளுக்கான உரிமமளித்தல் உடன்படிக்கை அல்லது தரவுகளைப் பகிர்தல் உடன்படிக்கை எக்காலப்பகுதிக்காக வலுவிலுள்ளதோ அக்காலப்பகுதிக்குச் செல்லுடியாதல் வேண்டுமென்பதுடன் அதன்கண் குறித்துரைக்கப்பட்ட நியதி நிபந்தனைகளுக்கு அமைந்ததாக இருத்தலும் வேண்டும்.

8. உரிமம் பெற்றவர் வெளிகாட்டுகைசாரா உடன்படிக்கையின் அல்லது தரவுகளுக்கான அணுகுகை உரிமத்தின் நியதிநிபந்தனைகளுள் எவற்றையும் மீறியுள்ளாரென அதிகார சபை திருப்திப்படின், அதிகார சபையானது, 6 ஆம் ஒழுங்குவிதியின் கீழ் வழங்கப்பட்ட தரவுகளுக்கான அணுகுகை உரிமமொன்றை இல்லாதொழிக்கலாம்.

9. ஆறாம் ஒழுங்குவிதியின்கீழ் வழங்கப்பட்ட தரவுகளுக்கான அணுகுகை உரிமமொன்று, சபையினால் தீர்மானிக்கப்பட்டவாறான புதுப்பித்தற் கட்டணமொன்றுடன், இயைபான உடன்படிக்கை முடிவுறுவதற்கு முன்னர் முப்பது நாட்களுக்குப் பிந்தாமல் அதிகார சபைக்கு அதற்கென விண்ணப்பமொன்று செய்யப்படுவதன் மீது புதுப்பிக்கப்படற்பாலதாதல் வேண்டும்.

10. தரவுகளுக்கான அணுகுகை உரிமமொன்று 6 ஆம் ஒழுங்குவிதிக்கமைய, உரிமம் பெற்றவர் நியதி நிபந்தனைகளைக் கடைப்பிடித்துள்ளாரென அதிகார சபை திருப்திப்படின் அதிகார சபையினால் புதுப்பிக்கப்படலாம்.

11. பௌதிக அல்லது தோற்றநிலையான தரவுகள் அறைப் பார்வையிடுதல்கள் ஒவ்வொன்றும் தரவுகள் அறை வழிகாட்டுநெறிகளின் கீழ் கண்டிப்பாக வழங்கப்படுதல் வேண்டும். தொலைநிலை அணுக்கம் போன்ற விடயத்தில், அத்தகைய அணுகுகையை வழங்குதல் அதிகார சபைக்கு நேரடி ஆகுசெலவொன்றை ஏற்படுத்தினால், சபையினால் தீர்மானிக்கப்பட்ட கட்டணம் எனற வடிவத்தில் அந்த ஆகுசெலவு விண்ணப்பகாரருக்குப் பொறுப்பிக்கப்படுதல் வேண்டும்.

12. அதிகார சபையினால் எழுத்தில் அங்கீகரிக்கப்பட்டாலொழிய, தரவுகளுக்கான அணுகுகை உரிமமொன்று, வெளிக்காட்டுகைசாரா உடன்படிக்கை, தரவுகளுக்கான உரிமமளித்தல் உடன்படிக்கை அல்லது தரவுகளைப் பகிர்தல் உடன்படிக்கை கைமாற்றப்படத்தக்கதாதல் ஆகாது என்பதுடன், தொடக்க விண்ணப்பகாரர் ஒரு கூட்டுமுயற்சியில் பங்காளரொருவராக வந்தால், பௌதிக ரீதியில் உள்ளவராகவிராதொழிந்தால் அல்லது அவரது சட்ட அந்தஸ்தை வேறுவகையாக மாற்றினால் செல்லுபடியுடையதாக இல்லாதொழிதலும் வேண்டும்.

13. இவ்வொழுங்குவிதிகளில் சந்தர்ப்பம் வேறுவகையாகத் தேவைப்படுத்தினாலொழிய -

''தரவுகளுக்கான அணுகுகை உரிமம்'' என்பது, குறித்த சில வகைகளினவான பெற்றோலியத் தரவுகளை அணுகுவதற்கும் பயன்படுத்துவதற்கும் உரிமம் பெற்றவர் என்ற முறையில் எவரேனும் விண்ணப்பகாரருக்கு அல்லது ஓர் உருவகத்துக்கு இலங்கைப் பெற்றோலிய அபிவிருத்தி அதிகார சபையினால் அளிக்கப்பட்ட ஓர் உரிமம் என்று பொருளாகும் ;

''தரவுகளுக்கான உரிமமளித்தல் உடன்படிக்கை'' என்பது, வர்த்தகப் பெறுமதி கொண்டவற்றைக் கொள்வனவு செய்வதன் மூலம் பெற்றோலியத் தரவுகளுக்கான அணுகுகையைப் பெறும் நோக்கத்துக்காக இலங்கைப் பெற்றோலிய அபிவிருத்தி அதிகார சபைக்கும் வேறொரு திறத்தவருக்கும் இடையேயானவோர் உடன்படிக்கை என்று பொருளாகும் ;

''தரவுகளைப் பகிர்தல் உடன்படிக்கை'' என்பது, கல்விசார் அல்லது வர்த்தகஞ்சாரா நோக்கங்களுக்காகப் பெற்றோலியத் தரவுகளைக் கைமாற்றும் நோக்கத்துக்காக இலங்கைப் பெற்றோலிய அபிவிருத்தி அதிகார சபைக்கும் வேறொரு திறத்தவருக்கும் இடையேயான ஓர் உடன்படிக்கை என்று பொருளாகும் ;

''வெளிக்காட்டுகைசாரா உடன்படிக்கை'' என்பது, அதிகார சபையினால் வழங்கப்பட்ட குறித்த சில தகவல்களை அந்தரங்கமானவையாக வைத்திருப்பதற்கு இலங்கைப் பெற்றோலிய அபிவிருத்தி அதிகார சபைக்கும் வேறோர் உருவகத்துக்கும் இடையேயான ஓர் உடன்படிக்கை என்று பொருளாகும் ;

''இலங்கைப் பெற்றோலிய அபிவிருத்தி அதிகார சபை'' என்பது, 2021 ஆம் ஆண்டின் 21 ஆம் இலக்க, பெற்றோலிய வளங்கள் சட்டத்தின் 3 ஆம் பிரிவின்கீழ் தாபிக்கப்பட்ட இலங்கைப் பெற்றோலிய அபிவிருத்தி அதிகார சபை என்று பொருளாகும் ; அத்துடன்

''பெற்றோலியத் தரவுகள்'' என்பது, 2021 ஆம் ஆண்டின் 21 ஆம் இலக்க, பெற்றோலிய வளங்கள் சட்டத்திலுள்ளவாறான அதே பொருளைக் கொண்டிருத்தல் வேண்டும்.

(ஒழுங்குவிதி 3)

**அட்டவணை I**

| **தரவுகளுக்கான அணுகுகை உரிமத்துக்கான விண்ணப்பப்படிவம்** | |
|---|---|
| விண்ணப்பகாரரின் பெயர் | |
| பதவிப்பெயர் | |
| ஒழுங்கமைப்பு/நிறுவனம் | |
| முகவரி | |
| கம்பெனிக் கூட்டிணைப்பு இல./தொழிற்பதிவு இல. | |
| மின்னஞ்சல் | |
| தொலைபேசி | தொலைநகல் |
| விண்ணப்பத்தின் வகுதி | குறியிடவும் ( ✓ ) |
| 1. பௌதிக அல்லது தோற்ற நிலையான தரவுகள் அறைப் பார்வையிடுதல்களுக்காக | |
| 2. அதிகார சபையிடமிருந்து அல்லது உரிமம்பெற்ற ஒப்பந்தக்காரரிடமிருந்து கொள்வனவு செய்வதற்காக | |
| 3. கல்விசார் ஆராய்ச்சிக்காக | |
| பெற்றோலியத் தரவுகள் நிரல் (www.pdasl.gov.lk இன் மீது கிடைக்கக்கூடிய இபெஅஅ தரவுகளின் பெயர்ப்பட்டியல் வரிசையைப் பார்க்கவும்) | |
| | |
| தரவுகளின் உட்கருதப்பட்ட நோக்கத்தின்/பாவனையின் விபரங்கள் | |
| | |
| அதிகாரமளிக்கப்பட்ட பிரதிநிதியின் கையொப்பமும் விபரங்களும் | |

மேலே கொடுத்துதவப்பட்ட விபரங்கள் எனது அறிவுக்கெட்டியவரை உண்மையானவையென வெளிப்படுத்துகின்றேன் என்பதுடன் பெற்றோலியத் தரவுகள் பெறப்பட்டதும் அந்தரங்கத் தன்மையைப் பேணிக்காப்பதன் மூலம் அவற்றைப் பகிராதிருப்பதற்கும் இத்தால் உடன்படுகின்றேன்.

கையொப்பம் :...................................................... திகதி :.............................................

பெயர் :......................................................

பதவிப்பெயர் :......................................................

பொது

(i) எல்லா ஆவணங்களும் ஆங்கிலத்தில் இருக்க வேண்டுமென்பதைக் கவனிக்கவும்.

(ii) எல்லாப் பெற்றோலியத் தரவுகளினதும் சொத்தாண்மை இலங்கை அரசாங்கத்துக்கு உரித்தாக்கப்பட்டுள்ளதுடன் அத்தகைய பெற்றோலியத் தரவுகளின் கட்டுப்பாடு அதிகார சபைக்கு உரித்தாக்கவும்படுகின்றது.

(iii) அதிகார சபை இவ்விண்ணப்பத்தைப் பரிசீலனை செய்து தரவுகளுக்கு உரிமமளிப்பதாவென முடிபுசெய்தல் வேண்டும். விண்ணப்பகாரருக்கு முடிபு உரிய முறையில் அறிவிக்கப்படும். அதிகார சபையின் முடிபு இறுதியானதாதல் வேண்டும்.

அதிகார சபையினது பணிப்பாளர் தலைமையதிபதியின் கவனத்துக்காக விண்ணப்பங்கள் dg@pdasl.gov.lk என்பதனூடாக அல்லது அஞ்சல் முகவரியினூடாக அனுப்பப்படுதல் வேண்டும்.

பெற்றோலிய அபிவிருத்தி அதிகார சபை,
மட்டம் 6, "செலிங்கோ மனை", சனாதிபதி மாவத்தை,
கொழும்பு 01,
இலங்கை.

EOG 03-0036/2

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.